செ.வெ.எண்: 05/ஏப்ரல் நாள்: 03.04.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

# காவலர்கள் பங்கேற்ற இருசக்கர வாகன வாக்காளர் விழிப்புணர்வு பேரணியினை

# மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்.இ.கா.ப., அவர்கள் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் காவல் ஆயுதப்படை மைதானத்தில் இன்று (03.04.2016) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., அவர்கள் ஆகியோர், காவலர்கள் கலந்து கொண்ட வாக்காளர் விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தேர்தல் முன்னேற்பாடு பணிகளும் வாக்காளர் விழிப்புணர்வு பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இராமநாதபுரம் காவல் ஆயுதப்படை மைதானத்தில் இன்று வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி நூறு சதவீத வாக்குப்பதிவினை எய்திட வேண்டும் என்ற எண்ணத்தை வலியுறுத்திடும் விதமாக காவல் துறையின் சார்பாக காவலர்கள் கலந்து கொண்ட வாக்காளர் விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணியை நடைபெற்றது. இப்பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இப்பேரணியில் 100க்கும் மேற்பட்ட காவலர்கள் கலந்து கொண்டனர். இப்பேரணியானது இராமநாதபுரம் காவல் ஆயுதப்படை மைதானத்திலிருந்து தொடங்கி பஜார் வழியாக ரோமன் சர்ச் வரை சென்று மீண்டும் கேணிக்கரை வழியாக மீண்டும் இராமநாதபுரம் காவல் ஆயுதப்படை மைதானத்தில் நிறைவடைந்தது.

அதன்பின்பு, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள 144 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 321 வாக்குச்சாவடி மையங்களுக்கான தேர்தல் உபகரனங்கள் மற்றம் அத்தியாவசிய பொருட்களை இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.ராம்பிரதீபன் அவர்களிடம் வழங்கினார்.

உதவி காவல் கண்காணிப்பாளர் திரு.சர்வேஸ்ராஜ்,இ.கா.ப., கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.இன்பமணி, மாவட்ட குற்றப்பதிவேடு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.மோகன்ராஜ், இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன், இராமநாதபுரம் வட்டாட்சியர் திரு.மாரி உட்பட காவலர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**